# திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)- ஆழ்வார்கள் அனுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)




ஆசிரியர்:

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்



நன்றி:

1.ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நாராயணன் ஸ்வாமி - தமிழ் மற்றும் ஸம்ஸ்க்ருத தட்டச்சு உதவி

2. www.anudinam.org - படங்கள் உதவி

3. ஸ்ரீமதி சாரதா ஸ்ரீநிவாஸன் - மின்புத்தகத் தொகுப்பு

4. சௌ. ஸ்வேதா ஸுந்தரம் - மின்புத்தகத் தொகுப்பு





CONTENTS


| | |
|---|---|
| ஆசிரியர் முன்னுரை | 1 |
| **திருவண்வண்டூர்** திவ்ய தேசம் | 3 - 12 |






Maha Vishnu (Courtesy: Anudinam.org)



ஸ்ரீ:

# திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)- ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

******

ஜய ஸம்வத்ஸரம் - சித்திரை மாதம் - April 29, 2014

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம். இந்த சுபமான யுகாதி பண்டிகை தினத்தில் அடியேனுடய ஸமர்ப்பணமாக இந்த மின் - புஸ்தகத்தை வெளியிடுவதை அடியேனின் பாக்கியமாக கருதுகிறேன்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த போது 1992 செப்டம்பர் தொடங்கி மார்ச் 1993 வரை வேலை நிமித்தமாக பல வெளிநாடுகளுக்கு ப்ரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் பகவத் சிந்தனை விடாமலிருக்க 108 திவ்ய தேசங்களைப்பற்றியும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பற்றியும், வேத வேதாந்தங்களைப் பற்றியும் ஏற்பட்ட எண்ணங்களின் கருத்து-கோவையை ஒரு நூல் வடிவமாக எழுதியது நேற்று நடந்தது போல் பசுமையாக நினைவில் நிற்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக, மலையாள நாட்டு திவ்ய தேசமான **திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)** பற்றி ஆழ்வார்களின் மங்களாசாஸனங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரி சடகோபன்





Mannargudi Rajagopalan on Sesha Vahanam (Courtesy: Anudinam.org )



ஸ்ரீ:

# திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)- ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)


ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )


*****

மலைநாட்டு திருப்பதிகள்: திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)

நம்மாழ்வாரின் 11 பாசுரங்கள் பெற்ற இத்தலத்தில், பாம்பணையான் என்ற "படவரவணையான்", கமலவல்லி தாயாருடன் வேதாலய விமான நிழலில், பாபநாச தீர்த்தக்கரையில் நின்ற திருக்கோலத்தில் ஸேவை தருகிறான். திருசெங்குன்றூர் என்ற திவ்ய தேசத்திலிருந்து நான்கு மைல் தூரத்தில், வடக்கு திசையில் உள்ள இக் கோயிலில் உள்ள பெருமாள், மார்க்கண்டேய முனிவருக்கும், நாரதருக்கும் ப்ரத்யக்ஷம்.

" நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று, நாடொறும் ஏக சிந்தையனாய்க் குருகூர்ச் சடகோபன் மாறன்" என்ற வகையில் நம்மாழ்வார் முந்திய ஐந்தாம் பத்தின் பத்தாவது திருமொழியை முடித்தார். திரு அநந்தாழ்வான் பாம்பின் மேல் பள்ளிக் கொண்டிருக்கும் பாம்பணையான் திருவடிகளே நமக்கு உபாயம் என்று முடிவு செய்து, ஒவ்வொரு தினமும் அவனை அடைவதிலேயே தன் சிந்தையை செலுத்தி ஒருமுகப்பட்டு, திருக்குருகூர் சடகோபன் என்ற பெயர் கொண்ட தான் இருந்ததாக மாறன் சொன்னார். ஐந்தாம் பத்தில் அர்ச்சாவதாரங்களை ஸேவிப்பதை சற்று நிறுத்தி, விபவ அவதாரமான க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்டு நின்றார். ஐந்தாம் பத்தின் ஒரு பாசுரத்தில்,

நின்றவாறு மிருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரியன,

ஒன்றுலாவுருவாய் அருவாய நின் மாயங்கள்,

நின்று நின்று நினைக்கின்றேன் ...





என்று நம்மாழ்வார் தன் மன நிலையை விளக்கினார். கண்ணா! நீ யமுனைக்கரையில் குழல் ஊதி நின்ற வகைகள் என்ன? நீ உன் தோழர்களுடன் ப்ருந்தாவனத்தின் சோலைகளில் நடுப்பகல் போஜனம் செய்த போது வீற்றிருந்த வகைகள் என்ன? உன் தாயாரான யசோதை தாலாட்ட, நீ பள்ளி கொண்டிருந்த வகைகள் என்ன? இவை நினைத்து அறிய முடியாதவை. பற்பல விதமானதும், சுலபமாக அறிய முடியாததுமான உன் மாயச் செயல்களை நின்று, நின்று (கொஞ்சம் கொஞ்சமாக) நினைக்க முயல்கிறேன். நீ பாற்கடலில் படுத்திருந்தும், உன் திருநாபியில் உதித்த செந்தாமரைப் பூ மேல் வீற்றிருக்கும் பிரம்மன் வேதம் ஓதி வருவதையும் நினைத்தால், என் மனது நெக்கி, உருகி நிற்கும் என்று மற்ற ஒரு இடத்தில் ஐந்தாம் பத்தின், பத்தாம் திருமொழிப் பாசுரமொன்றில் பின் வருமாறு ஆழ்வார் தெரிவித்தார்:



கண்ணன் தோழர்களுடன் ப்ருந்தாவனத்தில் ( Courtesy: Anudinam.org)

திருவுரு கிடந்தவாறும் கொப்பூழ்ச்

செந்தாமரை மேல், திசைமுகன்

கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும்,

பொருவில் உன் தனி நாயகமவை கேட்குந்

தோறுமென் நெஞ்சம் நின்று நெக்கு,

அருவி சோரும் கண்ணீர் என் செய்கேன் அடியேனே.





திரு உரு பாம்பணை மேல் கிடந்தவாற்றை இங்கு அனுபவித்தார். பத்தாம் பாசுரத்தில், எனது "ஆவியை உருக்கி உண்டிடுகின்ற நின் தன்னை நாடும் வண்ணம் சொல்லாய் நச்சு நாகணையானே" என்று பாம்பணையப்பனைக் கேட்டார். "நாகணை மிசை நம்பிரான் சரணே சரண்" என்று ஏக சிந்தையுடன் விபவங்களிலே ஈடுபட்டிருந்த நம்மாழ்வாரின் மனத் திரையில் திருவண்வண்டூர் பாம்பணையப்பன் என்ற அர்ச்சா மூர்த்தி தோன்றினான். நம்மாழ்வாரும் உடனே நாயகி பாவம் அடைந்து, பிராட்டியின் தன்மையில் நின்று, தூது விடும் ஆசார்ய பரம்பரை மூலமாகவே, அவனிடம் சரணாகதி செய்ய வேண்டுமென்று நமக்கு வழி காட்டினார்.

திருவண்வண்டூரில் உறையும் சக்ரபாணியை, "கனிவாய் பெருமான்" எனக் கூப்பிட்டு, கைகள் கூப்பி தான் கொண்ட காதலை குருகுகள் மூலமாக பராங்குச நாயகி பின் வருமாறு எடுத்துரைத்தாள்:

வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்!

செய்கொள் செந்நெலுயர் திருவண்வண்டூருறையும்,

கைகொள் சக்கரத் தென் கனிவாய்ப் பெருமானைக் கண்டு,

கைகள் கூப்பிச் சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையே.

பூந்தோட்டங்களும், குளிர் தென்றலும் கொண்ட திருவண்வண்டூர் சமீபம் உள்ள கடற் கரையில் தினந்தோறும் கூடும் குருகு பக்ஷிகளே! செந்நெல் பயிர்கள் நிறைந்த வயல்களை உடைய இத் திருப்பதியில் வாழும் பாம்பணையப்பன் என்ற என் நாதனை தர்சித்து, மஹா பாவியான நான் கைகளைக் கூப்பிக் கொண்டு, அவன் சேர்க்கையை எதிர்பார்த்துக் கொண்டு கலங்கி நிற்பதை எடுத்துரையுங்கள் என வேண்டினாள். அவனிடம் காதலுற்று, காதல் என்ற இருளில் அகப்பட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும் என் நிலைக்கு இரங்கி, தன் கையில் உள்ள மின்னொளி சக்ரத்தின் திவ்ய பிரகாசத்தால் இருட்டை அகற்றி, தன்னை அடையும் வழி காண்பிக்கச் சொல்லுங்கள் என குருகுகளிடம் பராங்குச நாயகி பிரார்த்தித்தாள்.

அடுத்தபடியாக தனது காதலியுடன் கூட மேய்ந்து வரும் கருநாரை ஒன்றைக் கண்டு, உனக்கு காதலியை விட்டு பிரிந்தால் ஏற்படும் துயர் புரியும். என் நாதனை விட்டு பிரிந்துள்ள என் துர்பாக்யத்தைக் கண்டறிந்து, எனக்காக பாம்பணையப்பனிடம் நீ தூது போ. அவனைக் கண்டதும், அவன் திருவடியில் விழுந்து, உனக்கு அடிமையே செய்ய விரும்பும் பராங்குச நாயகி என்ற அபலையை நீ கை விட்டிருப்பது தகுதி அல்ல என்று சொல்லி, அவனை





என்னுடன் சேர்த்துவை எனப் பின் வருமாறு வேண்டினாள்:

காதல் மென்பெடையோடு உடன் மேயும் கருநாராய்!

வேத வேள்வி யொலி முழங்கும் தண் திருவண்வண்டூர்,

நாதன் ஞாலமெல்லாம் உண்ட நம் பெருமானைக் கண்டு,

பாதம் கை தொழுது பணியீர் அடியேன் திறமே.

கடற்கரை கழியின் (உப்பங்கழியின்) அருகில் மேய்ந்து கொண்டிருந்த நாரைப் பக்ஷியை தூது போக வேண்டிய பின், உள் நாட்டில் வயல்களில் உணவைத் தேடி மேய்ந்து கொண்டிருந்த வெவ்வேறு வகையான பக்ஷிகளை தன் உதவிக்கு நாயகி அழைத்தாள். செல்வம் மல்கும் திருவண்வண்டூரில் நித்ய வாஸம் செய்யும்

திறங்களாகி எங்கும் செய்களூடுழல் புள்ளினங்காள்,

சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூருறையும்,

கறங்கு சக்கரக் கைக் கனிவாய் பெருமானைக் கண்டு,

இறங்கி நீர் தொழுது பணியீர் அடியேனிடரே.

துக்கங்கள் ஏதும் இல்லாது, பெடையுடன் உலாவித் திரியும் அன்ன பக்ஷிகளை அடுத்தபடியாக வேத கோஷம் நிறைந்த திருவண்வண்டூருக்கு நாயகி தூது போக வேண்டினாள். கடலிற்கு சமமான நீல நிறம் கொண்ட கண்ணனின் ஸன்னதி சேர்ந்து, உன்னைப் பிரிந்து தளர்ந்து நிற்கும் உன் நாயகியின் துயரம் தாங்க முடியாததாக இருக்கிறது என்று சொல்லுங்கள். வேதத்தை வகுக்க அன்னமாய் அவதரித்ததால், அன்னங்களிடம் அவனுக்கு தனி அபிமானம் இருக்கும் என நினைத்து, அன்ன பக்ஷிகளை தூது போக வேண்டினாள். நாயகியின் பிரார்த்தனை பின் வரும் பாசுர முகமாக வெளிப்பட்டது:

இடரில் போகம் மூழ்கி யிணைந்தாடும் மடவன்னங்காள்,

விடலில் வேத வொலி முழங்கும் தண் திருவண்வண்டூர்,

கடலின் மேனிப் பிரான் கண்ணனை நெடுமாலைக் கண்டு,





உடலம் நைந்தொருத்தி உருகுமென்றுணர்த்துமினே.

அன்னங்களே! என் இடறை அவன் களைவானோ அல்லது களையாது ஒதுங்கி நிற்பானோ என்று நினைக்காதீர்கள். அவன் தயாநிதி. ஆச்ரித ரக்ஷணத்தில் நிலைத்தவன், அவன். "புணர்த்த பூ தண் துழாய் முடி நம்பெருமானைக் கண்டு, புணர்த்த கையினராய் அடியேனுக்கும் போற்றுமினே" என்று நாயகி வேண்டினாள். நன்றாக தொடுக்கப்பட்ட குளிர்ந்த திருத்துழாய் மாலையை திருமுடியில் அணிந்து கொண்டுள்ள நம் பெருமானைக் கண்டவுடன், கை கூப்பிக் கொண்டு, அவனிடம் தாஸ்யம் செய்வதையே வாழ்க்கையின் லக்ஷ்யமாகக் கொண்டு, நான் அஞ்சலி பத்த ஹஸ்தையாய் நியமனத்தை எதிர்பார்த்து நிற்பதாகச் சொல்லுங்கள் எனப் பின் வருமாறு பராங்குச நாயகி கேட்டுக் கொண்டாள்:

உணர்த்தலூடணர்ந்து உடன் மேயும் மடவன்னங்காள்!

திணர்த்த வண்டல்கள் மேள் சங்கு சேரும் திருவண்வண்டூர்,

புணர்த்த பூந்தண் துழாய் முடி நம்பெருமானைக் கண்டு,

புணர்த்த கையினராய் அடியேனுக்கும் போற்றுமினே.

அடுத்தபடி நாயகி, குயில்களிடம் திருவண்வண்டூர் பெருமானிடம் என் நிலையை தெரிவித்து, அவன் எனக்கு என்ன பதில் சொல்கிறான் எனக் கேட்டு வாருங்கள் என்றாள். என்னுடைய காதலினால் ஏற்பட்ட கவலைகள் எப்படி முடிவடையும் எனக் கேட்டு, பதில் கொண்டு வாருங்கள் என வேண்டினாள். "ஆற்றல் ஆழியங்கையமரர் பெருமானைக் கண்டு, மையல் தீர்வது ஒரு வண்ணம் மாற்றம் கொண்டு அருளீர்" எனப் பிரார்த்தித்தாள். முதலில் அவனைக் கண்டு, தர்சியுங்கள்; அடுத்தபடியாக என் நிலையை எடுத்துரையுங்கள்; பின்னர், நீ அவளுக்கு என்ன வழி விடப் போகிறாய் எனக் கேட்டு, அவன் சொல்லும் வார்த்தையை எனக்கு கூறுங்கள் என வேண்டினாள். புன்னை மரங்களில் வஸிக்கும் அழகிய குயில்களை திருவண்வண்டூருக்கு தூது விடும் பாசுரம் பின் வருமாறு:

போற்றியானிரந்தேன் புன்னை மேலுறை பூங்குயில்காள்!

சேற்றில் வாளை துள்ளும் திருவண்வண்டூருறையும்,

ஆற்றலாழியங்கையமரர் பெருமானைக் கண்டு

மாற்றங்கொண்டருளீர் மையல் தீர்வாதொருவண்ணமே.





அவனிடமிருந்து நீங்கள் மறு மாற்றம் கொண்டு வந்தால் ஒழிய, என் காதல் நோய்க்கு மருந்து கிடையாது. நீங்கள் எனக்கு உதவ வேணும் என்று கேட்டுக் கொண்டாள்.

நாயகி, குயில்களிடம் கெஞ்சி வரும் போது, ஒரு கிளி அவள் சமீபம் வந்தது. தான் சொல்வதை கேட்காத குயில்களிடமிருந்து, தன் கவனத்தை நாயகி கிளியிடம் திருப்பினாள். உன் பசுமை நிறத்தை நினைவுறுத்தும் பசும் பொழில்களும், உன் சிவந்த வாய்க்கு சமானமான நிறமுடைய தாமரை புஷ்பங்கள் நிறைந்த தடாகங்கள் (ஒண் பூழ் செக்கர் வேலை) கொண்ட திருவண்வண்டூரில், உன் ஸாமர்த்யங்களை எல்லாம் உபயோகித்து பகவான் ஸன்னதியை அடை. அங்கு கரிய உருவும், சிவந்த அதரங்களும், தாமரை போல் சிவந்த கண்களும், கைத் தலங்களும். திருவடிகளும் கொண்டு, போரில் வெற்றி அளிக்கும் திருவாழியையும், பாஞ்சஜன்யம் என்ற சங்கத்தையும் அடையாளமாகக் கொண்ட பரம புருஷனைக் காண்பாய். அவனுடன் எனக்காக நீ பரிந்து பேசி, அவனுடைய பதிலை வாங்கி வா என்று கோலக் கிளியிடம் நாயகி வேண்டின பாசுரம் பின் வருமாறு:

ஒருவண்ணம் சென்று புக்கு எனக்கொன்றுரை ஒண்கிளியே!

செருவொண் பூம்பொழில் சூழ் செக்கர் வேலைத் திருவண்வண்டூர்,

கருவண்ணம் செய்யவாய் செய்யகண் செய்யகை செய்யகால்

செருவொண் சக்கரம் சங்கு அடையாளம் திருந்தக் கண்டே.

கிளியும் நாயகி சொல்வதை காதில் வாங்காது நின்றது. கிளியின் சமீபம், ஒரு சிறிய சாரிகை பக்ஷி மரத்தில் இருந்த பழத்தைக் கொத்திக் கொண்டிருந்தது. அந்த சாரிகையாவது தன்னிடம் இரங்கி தூது போய், பகவானுடைய மன நிலை அறிந்து சேதி சொல்லுமோ என நினைத்து, அதை தூது போகப் பின் வருமாறு வேண்டினாள்:

திருந்தக் கண்டெனக் கொன்றுரையாய் ஒண் சிறுபூவாய்!

செருந்தி ஞாழல் மகிழ் புன்னை சூழ் தண் திருவண்வண்டூர்,

பெருந்தண் தாமரைக்கண் பெருநீண் முடி நாற்றடந்தோள்,

கருந்திண் மாமுகில் போல் திருமேனியடிகளையே.

செருந்தி மரம், ஞாழல் வ்ருக்ஷம், மகிழ மரம், புன்னை வ்ருக்ஷம் ஆகிய புஷ்பித்திருக்கும்





மரங்கள் நிறைந்த குளிர்ந்த திருவண்வண்டூரில் என் நாதன் உள்ளான். அழகிய நெடுமுடியில் உயரிய க்ரீடத்தை அணிந்து கொண்டு, நான்கு வலிமையுள்ள தோள்களுடன், கார்கால மேகம் போல் நிறம் கொண்டு என் அப்பன் உள்ளான். அவனை அணுகி, உன் காதலிக்கு தெளிவாக ஒரு பதில் அளி என்று கேட்டு, அவனுடைய நடையுடை பாவனைகளிலிருந்து, என் உதவிக்கு வருவானா இல்லையா என்பதை அறிந்து வந்து சொல் என்று சாரிகை பக்ஷியிடம் கேட்டாள்.

சாரிகையும் நகராது நின்றது. முன் வேண்டிய அன்ன பக்ஷிகள், தன்னிடம் இரங்கி அருகில் வந்ததை நாயகி கண்டாள். ஒருக்கால், அவை மனதை மாற்றிக் கொண்டு தூது போக தயாராய் உள்ளனவோ என நினைத்து, மறுபடியும் அவைகளைப் பின் வருமாறு வேண்டினாள்:

அடிகள் கைதொழுது அலர்மேல் அசையும் அன்னங்காள்,

விடிவை சங்கொலிக்கும் திருவண்வண்டூருறையும்,

கடிய மாயன் தன்னைக் கண்ணனை நெடுமாலைக் கண்டு,

கொடிய வல்வினையேன் திறம் கூடுமின் வேறு கொண்டே..

அன்னங்களே! நீங்களோ தாமரைப் பூக்களின் மேல் அமர்ந்துள்ளீர்கள். தென்றல் காற்று வீசும் போது, தாமரைகளும் அசைகின்றன. அதற்கு தகுந்தது போல், நீங்களும் அசைந்தாடி சுகத்தை அனுபவிக்கிறீர்கள். நீங்கள் எனக்காக உங்கள் சுகாஸனங்களை விட்டு, திருவண்வண்டூர் செல்ல வேணும்! விடியற் காலையில், ஸுப்ரபாதத்திற்காக அவன் ஸன்னதியில் சங்கு ஒலிக்கப்படும் போது, நீங்கள் திருபள்ளியுணர்த்த வரும் கோஷ்டியுடன் கர்ப்பக்ருஹம் அடைந்து, பிராட்டியுடன் அவன் பக்தர்களை அருளும் சமயத்தில், என் நிலையை எடுத்துச் சொல்லுங்கள். அந்த பிராட்டியின் புருஷகார பலத்தால், அவன் எனக்கு உதவ நினைக்கக் கூடும். அவளருள் அல்லாது, எனக்கு அவனுடைய அனுக்ரஹம் கிட்டாது. அதனால் குளிர்ந்த விடியற் காலை வேளையில், அந்த திவ்ய தம்பதிகள் ஸந்நிதானத்தில் எனக்கு உதவி, அவன் குறிப்பறிந்து வாருங்கள் என அன்ன பக்ஷிகளிடம் வேண்டினாள்.

அன்ன பக்ஷிகளும், தாமரை மேல் உள்ள சுகாஸனத்தை விட்டு, பனி கொட்டும் விடியற் காலையில் தூது போவானேன் என நினைத்து, சும்மா இருந்தன. பக்ஷிகள் தான் தூது போக மாட்டேன் என்கின்றனவே என நினைத்து, திருவண்வண்டூருக்கு, அந்த திருப்பதியின் நாமத்தில் அடங்கியுள்ள வண்டுகளையே தூதாக அனுப்புவோம் என நினைத்தாள்.







வடவூர் ராமர் ( Courtesy: Anudinam.org )

வண்டுகள் ரீங்காரம் மூலம் நாம ஸங்கீர்த்தனம் செய்வதால் திருவண்வண்டூர் என்ற பெயர் பெற்ற திருப்பதிக்கு ப்ரமரம் என்ற வடமொழிப் பெயர் மூலம் த்விரேபம் (இரண்டு “ர” க்கள் கொண்டது) என்ற விசேஷ நாமம் கொண்ட வண்டுகளைத் தூது அனுப்ப விரும்பினாள். த்விரேபம் என்பது வேதத்திற்கும் ஏற்பட்ட அடைமொழி. அதனால் வேதம் ஒலிக்கும் திருவண்வண்டூருக்கு, வேத சம்பந்தம் கொண்ட வண்டுகளை தூது போக நாயகி வேண்டினாள். இப்பாசுர வாக்யங்கள் பின் வருமாறு:

வேறு கொண்டும்மை யானிரந்தேன் வெறி வண்டினங்காள்,

தேறு நீர்ப்பம்பை வடபாலைத் திருவண்வண்டூர்,

மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த,

ஏறு சேவகனார்க்கு என்னயும் உளன் என்மின்களே.

பம்பா நதியின் வடகரையில் உள்ள திருவண்வண்டூரை அடைந்து, அங்கு இலங்கையை தன் வீர்யத்தால் அழித்த ராமசந்த்ரனாக நிற்கும் பாம்பணையப்பனிடம், உன்னை நம்பி ஒரு பெண்





திருக்குருகூரில் கண்ணீர் விட்டுக் கொண்டு இருக்கிறாள். அவளுக்கு நீ என்ன வழி விடப் போகிறாய் எனக் கேட்டு வாருங்கள் என்று நாம சம்பந்தத்தால் விசேஷம் பெற்ற வண்டுகளிடம் வண்டூர் போய் வரக் கேட்டாள்.

திருவண்வண்டூர் பாசுரங்களின் முடிவில், இப் பாசுரங்களை பாடுவதால் ஏற்படும் மங்களங்களை பின் வருமாறு நம்மாழ்வார் விளக்கினார்:

மின்கொள் சேர்புரிநூல் குறளாய் அகல் ஞாலம் கொண்ட,

வன் கள்வனடிமேல் குருகூர்ச் சடகோபன் சொன்ன,

பண்கொள் ஆயிரத்துள் இவை பத்தும் திருவண்வண்டூர்க்கு,

இன்கொள் பாடல் வல்லார் மதனர் மின்னிடையவர்க்கே.



Tirukovalur Trivikrama Perumal (Courtesy: Anudinam.org )

மின்னலைப் போல் பளிச்சென்று பிரகாசிக்கும் முப்புரி ஸ்வர்ண யஞ்ஞோபவீதத்தைத் தன் கருநீலத் திருமேனியில் அணிந்து கொண்டு, வாமன மூர்த்தியாய், பலி சக்ரவர்த்தியின்





யாகசாலை சேர்ந்து, மூன்றடி யாசித்து, பரந்த பூமியை தன் திரு பாதத்தால் அளந்து, வஞ்சகமாய் அந்த மஹாபலியின் செல்வங்களை பறித்துக் கொண்ட உலகளந்தான் விஷயமாகத் தன் திருவண்வண்டூர் பாசுரங்கள் செய்யப் பட்டவை என்று ஆழ்வார் சொன்னார். இப்பாசுரங்களை இராகத்துடன் பாடக் கற்றவர், ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிகளில் கலக்கும் பாக்யம் பெற்று, நாயகனான பகவானிடம் சேர்வர் என்றார். வண்டுகளுக்கும் திருவண்வண்டூருக்கும் உள்ள சம்பந்தம் ஆறு கால்கள் கொண்ட வண்டுகள் போல், ஆறு அங்கங்கள் கொண்ட சரணாகதி என்ற உபாய மூலம் ஆசார்ய முகமாக அருள் பெற வேணும் என இப்பாசுரங்கள் மூலம் திருக்குருகூர் சடகோபன் உபதேசித்தார். நாமும் பாம்பணையப்பன், கமலவல்லி என்ற திருவண்வண்டூர் திவ்ய தம்பதிகளிடம் ப்ரபத்தி செய்து மங்களங்கள் பெறுவோமாக!

श्रीसित भ्रमर क्षेत्रे पापनाश पुष्करणी तटे वेदालय विमानश्चायायां स्थिताय प्रतिच्याभिमुखाय श्रीमते कमलवल्ली नायिका समेत श्री पम्पाश्रयया (பாம்பணையப்பன்) कमलनाथ परब्रह्मणे नमः

ஸ்ரீஸித ப்ரமர க்ஷேத்ரே பாபநாச புஷ்கரணீ தடே விமானச்சாயாயாம் ஸ்திதாய ப்ரதீச்யாபிமுகாய ஸ்ரீமதே கமலவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ பம்பாச்ரயயா (பாம்பணையப்பன்) கமலநாத பரப்ரஹ்மணே நம:

SrIsita bhramara kshetre pApanASa pushkaraNI taTe, vedAlaya vimAnaScAyAyAm sthitAya praticyAbhimukhAya SrImate kamalavallI nAyikA sameta SrI pampASrayayA kamalanAtha parabrahmaNe namaH

||சுபம்||

# Additional Reading Material:

Sthala Puranam from Anudinam.org

